முருகப்பெருமான் துணை

**மகான் புலத்தீசர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

24.05.2022, செவ்வாய்கிழமை

1. பிரணவ ராஜனே அரங்கா
பிரணவக் குடில்படைத்த தேசிகா
சரவணச் சுடரேற்றி உலகினில்
சங்கடம் போக்க வந்த தேசிகா
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
ஆசிபட சுபகிருது விடை திங்கள்
அறிவிப்பேன் தச திகதி குசன் வாரம்
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 10 ம் நாள், 24.05.2022 செவ்வாய்கிழமை)
3. வாரமதில் புலத்தீசர் யானும்
வழங்குவேன் உலக நலம்பெற
சோரமின்றி இந்தப் பேருலகம்
சுத்த நெறி எனும் சக்தி அடைய
4. அடையவே கலித்துன்பம் எனும்
அனைத்து இடர்களும் விலகும்
தடைபடும் சகல வளர்ச்சிகளும்
தானாக சரியாக முழுமை காணும்
5. காணவே அரங்கன் நெறி
கருணை வளர்க்கும் உயர்நெறி
ஞானமாக ஏற்று வந்துவிட்டால்
நன்மைதரும் சக்தியாக மாறி
6. மாறியே அகிலம் எங்கிலும்
மாற்றமும் ஆற்றலும் கூட்டும்
அறியாமை போக்கி தெளிவுடன்
ஆன்ம பலம் பிறஉயிரைநேசிக்கும்
7. நேசிக்கும் தயவுபலமும் மிக்க
நீதிமான்களாகவே மாற்றும்
ஆசிதந்து அரங்கன் சொரூபில்
அரங்கன் தருகின்ற தீட்சை
8. தீட்சை முக்குணங்களிடையான
தீட்டை விலக்கி மீட்கும்
மாட்சிமை மிக்க மக்களாகி
மனப் பக்குவம் தெளிவும் கூட்டும்
9. கூட்டதன் இரகசியம் ஊட்டும்
குறிப்பாகப் பிறவிப் பயனையும்
காட்டியே இனி பிறவாமையென
கடைநிலைக்கும் தேற்றும்

10. தேற்றவல்ல மகா ஞானி
தேசிகனே கலியில் அவதரித்த
ஆற்றல்மிக்க ஞான குரு
அடையாளம் கண்டு வந்திணைய

11. இணையவே அலைக்களிப்பில்லை
இணையவே இனி பிறவி இல்லை
துணையாக அரங்கன் பலம்
திருவருளாக வந்து காத்தருளும்
அருளாசி முற்றே

—சுபம்—